**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: : https://doi.org/10.63300/tm12012026.39

# Materialistic Elements Reflected in the Flowers of the Mullai Landscape: A Study of Kuruntokai

**Dillibabu R*[1], Dr.N. Sivaguru[2],**
[1]Research Scholar, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore -632115.
ORCID iD: https://orcid.org/0009-0006-4013-4988
[2]Associate Professor, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore -632115. Gmail ID arasi162010@gmail.com, Tel: 9486148837.
ORCiD: https://orcid.org/0000-0001-9425-1078.
*Corresponding Author EMail: dillibabu04201999@gmail.com, Tel: 7826965800

Date of Submission: 20-06-2026 Date of Acceptance: 22-06-2026

**Abstract:** Sangam literature serves as a profound reflection of the Tamil way of life and the harmonious social relationships integrated with nature. In the Mullai landscape poems of the Kuruntokai, flowers are not merely aesthetic objects; rather, they function as markers of time and instruments that signify social transformation. This study elucidates how ancient Tamils approached land and time through a materialist perspective. Adopting the framework of historical materialism, this research analyzes the correlation between specific seasonal phases—Kar Kaalam (rainy season), Kuthir Kaalam (early winter), Ila-venil Kaalam (spring)—and the blooming cycles of flowers. The study particularly highlights how these natural descriptions evolved in tandem with human labor and societal shifts, tracing the transition from hunter-gatherer to agrarian societies. Through an analysis of the nine types of flowers associated with the Mullai landscape in Kuruntokai, this article examines the people’s lifestyle, economic development, and social evolution through the lens of dialectical and historical materialism.

**Keywords:** *Kuruntokai, Mullai landscape, Flowers, Materialism, Historical Materialism, Social Change.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library (Tamilmanam), Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher’s Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)* www.tamilmanam.in
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

# குறுந்தொகையில் முல்லைத் திணைப் பூக்கள் வழி பொருள்முதல்வாதக் கூறுகள்

[1]**ரா. டில்லிபாபு,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் -632115.
[2]**முனைவர் நா. சிவகுரு,** இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் -632115.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியம் தமிழரின் வாழ்வியலையும், இயற்கையோடு இயைந்த சமூக உறவுகளையும் பிரதிபலிக்கிறது. குறுந்தொகையின் முல்லைத் திணைப் பாடல்களில் பூக்கள் வெறும் அழகுப் பொருளாக மட்டுமல்லாமல், காலத்தைக் கணிக்கும் குறியீடுகளாகவும், சமூக மாற்றங்களை உணர்த்தும் கருவிகளாகவும் அமைந்துள்ளன. பழந்தமிழர்கள் நிலம் மற்றும் காலத்தை எவ்வாறு பொருள் சார்ந்த புரிதலோடு அணுகினர் என்பதை இவ்வாய்வு விளக்குகிறது. பொருள்முதல்வாதக் கோட்பாட்டின் அடிப்படையில், கார் காலம், கூதிர் காலம், இளவேனிற் காலம் மற்றும் மாலைப் பொழுது ஆகியவற்றோடு பூக்கள் கொண்ட தொடர்பு ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக, இயற்கை வர்ணனைகள் காலப்போக்கில் மனித உழைப்பு மற்றும் சமூகச் செயல்பாடுகளோடு (வேட்டைச் சமூகம் முதல் வேளாண் சமூகம் வரை) இணைந்த மாற்றத்தை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. குறுந்தொகை பாடல்களில் உள்ள 9 வகை முல்லை நிலப் பூக்கள் வழி மக்களின் வாழ்வியல், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூகப் பரிணாமத்தை இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதப் பார்வையில் இக்கட்டுரை அணுகுகிறது.

**திறவுச் சொற்கள் :** குறுந்தொகை, முல்லைத் திணை, பூக்கள், பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள்முதல்வாதம், சமூக மாற்றம்.

**முன்னுரை**

சங்க இலக்கியம் தமிழரின் வாழ்வியலை வெளிப்படுத்துகிறது. குறுந்தொகை குறுகிய அடிகளைக் கொண்ட ஐந்திணை பற்றிய பாடல்களின் தொகுப்பு ஆகும். குறுந்தொகையில் முல்லைத் திணைப் பற்றிய பாடல்கள் தொகை 44 ஆகும். பூக்கள் பெண்மைக்கும் தூய்மைக்கும் உவமையாய் அழகுக்கும் வாசனைக்கும் மருந்துக்கும் பொருளாய் பயன்படுத்தபட்டுள்ளன. முல்லைத் திணைப் பூக்கள் காலத்தையும் நேரத்தையும் காட்டுகின்றன. தத்துவம் என்பது உலகத்தைக் காட்டும் கண்ணாடி ஆகும். தத்துவத்தின் பிரிவான பொருள்முதல்வாதம் என்னும் கோட்பாடு பொருளும் பொருள் சார்ந்த உணர்வுகளும் என்ற கூறுகளின் வழியாக உலகைப் பார்க்கிறது. பொருள்முதல்வாதம் பல நூற்றாண்டுகள் கடந்து அறிவியல் துணையுடன் வளர்ச்சி அடைந்துள்ளது. வளர்ச்சி அடைந்த இயக்கவியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுப்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)* www.tamilmanam.in
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

பொருள்முதல்வாதமும் மனிதனின் வாழ்வியலைப் விளக்குகிறது. முல்லைத்திணைப் பூக்களும், பூக்கள் உணர்த்தும் மக்களின் செயல்பாடுகளையும் காண்பதே ஆய்வின் நோக்கமாகும். குறுந்தொகை முல்லைத் திணைப் பாடல்கள் மூலம் மக்களின் செயல்பாடுகளில் தவிர்க்க முடியாத பொருளாக இயற்கைப் பொருள், உணர்வு சார்ந்த பொருளாக பூக்கள் அமைகின்றன. முல்லைத் திணைப் பூக்கள் வழி மக்களின் செயல்பாடுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பூக்கள்**

பழந்தமிழர்கள் பூவை வைத்து நிலத்திற்குப் பெயர் வைத்தார்களா? இல்லை நிலத்தை வைத்து பூவிற்குப் பெயர் வைத்தார்களா? என்ற கேள்வி தவறானது. நிலம் என்ற பொருளின் சினையாக உறுப்பாக மரங்கள், செடிகள் அதில் மலரக்கூடியவையை பூ என்று அழைக்கிறோம். நிலமே அடிப்படையானது. பெயர் வைப்பு முறையானது அந்நிலத்தில் அதிகம் பூக்கக்கூடிய பூக்களை மற்றும் மக்கள் அதிகம் பயன்படுத்தும் பூக்களை வைத்தே பெயர் சூட்டியுள்ளனர். முல்லைப் பூவைப் பயன்படுத்தி அன்றைய மக்கள் முல்லை நிலம் என்று நிலத்திற்கு பெயர் வைத்துள்ளனர். முல்லை நிலம் காடும், காடு சார்ந்த நிலப்பகுதி ஆகும். இந்த காட்டு நிலப் பகுதிக்குத் தொல்காப்பியர் அவர் காலத்திலே, அவர் காலத்திற்கு முன்போ முல்லை நிலம் என்று அக்காட்டில் வளர்ந்த முல்லைப் பூவை வைத்து பெயர் வைத்துள்ளனர். முல்லை நில மக்கள் முல்லைப் பூ, கொன்றைப் பூ, வேப்பம்பூ, பிச்சிப் பூ, கருவிளம் பூ, ஈங்கையின் மலர், அவரைப் பூ, பிடவம் பூ, பீர்க்கம் பூ ஆகிய பூக்களைக் குறுந்தொகை முல்லைத் திணை பாடல்கள் வழி காணமுடிகிறது. பூக்களை ஆணும் பெண்ணும் தலையில் சூடிக் கொண்டனர். அன்றைய மக்கள் போருக்கும் பிற செயல்களுக்கும் பூக்களைச் சூடி இருப்பதைப் புறத்திணைப் பாடல்களின் வழி காணலாம். அகத்திணையில் முல்லை நில மக்கள் பூ என்ற பொருள் கொண்டு காலத்தையும் நேரத்தையும் கணித்து. அதனை, வழக்கத்திலும் பழக்கத்திலும் பயன்படுத்தி வந்துள்ளனர்**.**

**பொழுதுகள்**

> **“முதல் எனப் படுவது நிலம் பொழுது இரண்டின்**
>
> **இயல்பு என மொழிப இயல்பு உணர்ந் தோரே”** (தொல்.பொ.4)

தொல்காப்பியர் நிலம் என்ற பொருளின் மேல் காலம், நேரம் என்று பொழுதுகளைப் பிரித்துள்ளார். பொருள்முதல்வாதம் தத்துவமானது பொருள் மேல் தான் மனிதனுக்கு உணர்வுகளும், கருத்துக்களும், செயல்களும் தோன்றுகிறது என்பதாகும். அதாவது, ஒரு பொருளில் இருந்துதான் ஒரு புதிய பொருள் தோன்றுகிறது. இரண்டும் வெவ்வேறு வடிவம் கொண்டிருந்தாலும் ஒரு சில தொடர்புகள் அவற்றிற்குள் இருக்கும். ஒரு சில செயல்கள் கண்ணுக்குப் புலப்படும். சில செயல்கள் கண்ணுக்குப் புலப்படுவது இல்லை, இருந்தும் அதில் இயக்கம் என்பது நடைபெற்றுக்கொண்டே இருக்கும். அதனை, **“அண்டத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் இயங்கிக் கொண்டே இருப்பதோடு மாறிக் கொண்டும் இருக்கின்றன. எல்லாம்**

, | Copyright © Author(s)

**தோன்றிக் கொண்டும் மறைந்து கொண்டும் இருக்கின்றன" (பிச்சமுத்து, 2006)** என்பதே இயக்கவியல் பொருள்முதல்வாதம் ஆகும். இதனையே காரல் மார்க்ஸ், பிட்டரிக் ஏங்கெல்ஸ் ஆகியோர் இயங்கியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்ற பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சி நிலையாக பார்த்தனர்.

பழந்தமிழர்கள் பொழுதுகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை, பெரும்பொழுது, சிறுபொழுது ஆகும். பெரும் பொழுது என்பது ஒரு ஆண்டுக்கான பருவ காலங்களைக் கூறுகின்றது. சிறுபொழுது என்பது ஒரு நாளுக்கான நேரங்களையும் வேளைகளையும் கூறுகின்றது.

**காலமும் பருவங்களும்**

பொருட்களின் மீது காலத்தை அறிந்து பழந்தமிழர் வாழ்ந்துள்ளனர். அந்த பொருள் தான் பூ என்று பழந்தமிழர்கள் வகைப்படுத்துக்கின்றனர். ஒரு ஆண்டுக்கு காலத்தை 6 பருவங்களாக பிரிக்கின்றனர். அதனை பெரும்பொழுது என்று அழைக்கின்றனர். 6 பருவங்கள் என்பது கார் காலம், கூதிர் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம், இளவேனில் காலம், முதுவேனில் காலம் என பிரித்துள்ளனர். இயற்கையின் மாற்றத்தாலும் பூமியின் இயக்கத்தாலும் பருவநிலைகள், காலம் மாறுகிறது. பொருள்முதல்வாதம் பொருளுக்கு முதன்மை இடம் கொடுக்கிறது. உணர்க்கு இரண்டாம் இடம் கொடுக்கிறது. குறுந்தொகை முல்லைத் திணைப் பாடல்கள் வழியாக கார் காலம் முல்லைத் திணைக் கூறிய பெரும் பொழுதாக கொள்ளப்படுக்கின்றது. முல்லை நிலம் மாற்றம் கொண்டதால் இங்கு கூதிர் காலம், இளவேனில் காலம், கார் காலம் என்று பருவங்களும் மாற்றம் அடைக்கின்றன. இம் மாற்றத்தை அறிந்து கொள்ள பழந்தமிழர்கள் பூ என்ற பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

**கார் காலம்**

கார் காலம் என்பது தமிழ் மாதமான ஆவணி, புரட்டாசி மாதங்களை குறிப்பிடுக்கின்றது. இதற்கு முன் மாதமான ஆனி, ஆடி என்ற முது வேனிற் காலமாகும். இது பாலை நிலத்து உரியவை, அந்நிலத்தில் வறண்ட நிலங்கள் மழையால் மாற்றம் அடைந்து முல்லை நிலமாக புன்செய் நிலமாக மாற்றம் அடைக்கிறது. கார் காலத்து மழையால் பூக்கின்ற பூக்கள் கொன்றைப் பூ, பிடவம் பூ, முல்லைப் பூ ஆகும்.

**கொன்றைப் பூ**

**"கதுப்பில் தோன்றும் புதுப் பூங் கொன்றைக்**
**கானம் கார் எனக் கூறினும்"** (குறு. 21.3-4)

வண்டுகள் வந்து படியுமாறு, காட்டில் புதுப் பூக்கள் கொன்றைப் பூவைப் பார்த்து கார் காலம் என்று குறிப்பிடுகின்றனர். மேலும், பாலை நிலம் மாற்றம் அடையும் பொழுது கொன்றைப் பூ பூக்கிறது அது கார் காலம் என்று கூறுகின்றனர். அவை,

**“மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை**
**கல்பிறங்கு அத்தம் சென்றோம் கூறிய**
**பருஉம் வாரா அளவை நெரிதரக்**
**கொம்பு சேர் கொடி இணர் ஊழ்த்த**
**வம்ப மாரியைக் கார் என மதித்தே”** (குறு.66)

பொருள் தேடி தலைவன் குன்றுகள் நிறைந்த பாலை நில வழிச் சென்றான். அப்பகுதியில் கொன்றை மரமானது பரந்த அடிப் பகுதியை உடைய உயர்ந்த மரமாக நெருக்கமான கிளைகளுடன் கொன்றைப் பூ, பூத்துக் குலுங்குகிறது. இதனைக் கார் பருவம் என்று வகுத்துள்ளனர். மேலும் ஒரு சான்று,

**“கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்**
**பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன**
**கார் எதிர் புறவினதுவே ...... ”** (குறு. 233. 2-4)

கொன்றைப் பூ பூத்து குலுங்கி பூவின் இதழ்கள் நிலத்தில் விழுந்து பரவிக்கிடக்கிறன. அதைப் பார்ப்பதற்குப் சிதறிய பூ பொற்காசுகள் போல் அதன் இதழ்கள் உள்ளன. கார் காலத்தை எதிர்க்கொண்ட முல்லை நிலம். இக்கொன்றைப் பூவானது பாலை நிலம் இருந்து முல்லை நிலமாக மாறும் காலத்தில் பூக்கிறது. முதல் மழைக்குப் பூக்கும் பூ கொன்றைப் பூ ஆகும். இது கார் காலத்தின் தொடக்க நிலை என்று அறியலாம். பொருள்முதல்வாதம் ஆனது கொன்றைப் பூவிற்கு முதலில் இயற்கை வர்ணனைகள் சொல்லப்பட்ட பிறகு பொற்காசு என்ற செயற்கை வர்ணனையும் கொடுக்கப்படுகிறது. இதில் பொதுவுடைமைச் சமுதாயத்தில் இருந்து நிலவுடைமைச் சமுதாயத்திற்கு மாறி உள்ள நிலையை எடுத்துக்கூறும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் காணப்படுகிறது. பொதுவுடைமைச் சமுதாயம் இயற்கையான வர்ணனையை குறு. 66.21. பாடலில் மூலம் பதிவு செய்துள்ளனர். குறு. 233 பாடலில் நீண்ட கால இடைவெளி காணப்படுகிறது. இயற்கை வர்ணனைக்குப் பதில் செயற்கை வர்ணனை கொடுப்பதன் வழியாக நிலவுடைமைச் சமுதாயத்தைக் குறிப்பதை அறியலாம். கொன்றைப் பூ என்ற பொருள் நீண்ட காலமாக கார்காலத்தைக் குறிப்பனவாகவே இருந்துள்ளதை அறிய முடிகிறது. கார் காலத்துக்கும் கொன்றைப் பூவுக்கும் தொடர்பு இருப்பதைப் போல அன்றைய மக்களின் சமுதாயத்திற்கும் தொடர்பு உள்ளது. இதனை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்று அறியலாம். கொன்றைப் பூ கார் காலத்தைக் காட்டுகிறது. கார் காலத்தைக் காட்டும் வேறு சில பூக்களும் உள்ளன.

**முல்லைப் பூ**

முல்லைப் பூ ஒரு நிலப் பகுதிக்கு அடைமொழியாக அமைந்துள்ளது. காடும், காடு சார்ந்த நிலப்பகுதியான புன்செய் நிலத்தில் முல்லைப் பூ பூக்கின்றன. மழையின் காரணமாக காய்ந்த நில பகுதியில் உள்ள மரங்கள், செடிகளில் பூக்கள் பூக்கின்றது. அங்கு மக்கள் அதிகம் பயன்படுத்தக் கூடிய பூவாக முல்லைப் பூ இருப்பதை அறியலாம். மக்கள் பயன்பாட்டின் மூலமாக முல்லைப்

பூக்கள் கார் காலத்தைக் காட்டுவனவாக உள்ளன. அவை,

**" அவரோ வாரார், முல்லையும் பூத்தன**

**…….. ……… ……. ……..**

**…… ……. ….. …. ….**

**ஆடுடை இடைமகன் சென்னிச்**

**சூடிய எல்லாம் சிறுபசு முகையே"** (குறு.211.1,4-5)

மழையின் காரணமாக முல்லைப் பூக்கள் பூத்து குலுங்கின்றன. அந்த முல்லைப் பூவை ஆடு மேய்க்கும் இடையர் சமூகத்தைச் சார்ந்த சிறுவன் தலையில் சூடியுள்ளான. முல்லைப் பூவின் வெண்மையான மொட்டுகளாலேயே கார் காலம் வந்ததை ஊருக்கு விளம்பரம் படுத்துவதாக உள்ளன.

**பிடவம் பூ மற்றும் பிச்சி பூ**

பிடவம் பூ என்பது கார் காலத்தில் அதிக மழை பெய்யும் காலத்தை உணர்த்துவாக அமைந்துள்ளது. மாரி என்ற சொல் வெறும் மழையை மட்டும் குறிப்பதல்ல. அது ஒரு குறிப்பிட்ட காலத்தின் தீவிரத்தன்மையையும் குறிக்கிறது. முல்லை நிலத்தில் தொடர் மழை பெய்யும் காலத்தை அடையாளப்படுத்தும் குறியீடாகப் பிடவம் பூவை மக்கள் பயன்படுத்தியுள்ளனர். மாரி என்ற தொடர் மழை பெய்யும் காலத்தோடு, பிடவம் பூ பூக்கும் பருவம் பிணைக்கப்பட்டுள்ளதை, மக்கள் காலத்தை அறிந்துகொள்ளப் பயன்படுத்திய ஒரு உயிரியல் கடிகாரமாக நாம் பொருள்முதல்வாத அடிப்படையில் காணலாம்.

**"மடவ வாழி மஞ்ஞை மாஇனம்**

**கால மாரி பெய்தென அதன் எதிர்**

**ஆலலும் ஆலின் பிடவும் பூத்தன**

**கார் ….. …… ….. …. "** (குறு.251. 1-4)

மயில்கள் கூட்டம் தொடர் மழை பொழிவதைப் பார்த்து மகிழ்ச்சியில் ஆடுகிறது. அதனைத் தொடர்ந்து கார் காலத்து தொடர் மழையால் பிடவம் பூக்கள் பூத்தன. மேலும்,

பிடவம் பூ போலவே பிச்சிப் பூவும் மாரி என்ற தொடர் மழை பெய்யும் தருணத்தைக் காட்டுகிறது. அவை,

**"பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து**

**அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே"** குறு.94. 1-2)

மாரி பெய்த பிறகு பிச்சிப் பூ பூக்கும். இப்பாடல் அடியில் மாரி பெய்யும் பொழுதே முன்னதாகவே பூத்து இருப்பதைக் காட்டுகிறது. கால மாற்றத்தைக் காட்டுகிறது. நிலம் - மழை - பூக்கள் - கார் காலம் என்று ஒன்றை ஒன்று தொடர்பு உடையனவாகவும் மாறுபட்ட இயக்கங்களை கொண்டு இருப்பதையும் பொருள்முதல்வாத அடிப்படையில் காண முடிகிறது.

**கூதிர் காலம் அல்லது குளிர் காலம்**

கார் காலத்துக்கு அடுத்து தொடர்ச்சியாக வரக்கூடியது கூதிர் காலம் ஆகும். இக்காலம் ஐப்பசி, கார்த்திகை மாதங்களை உள்ளடக்கியது. குளிர்ந்த காற்று அல்லது வாடைக் காற்று வீசும் இரவு நேரங்களில் மழை பொழிவும் நடைபெறும். இக் கூதிர் காலம் குறிஞ்சி திணைக்கு உரியதாக சொல்லப்படும். இக்காலம் இப்பாடலில் முல்லைத் நிலத்துக்கு வருவதற்கான காரணம் வறண்ட நிலமான புன்செய் நிலத்தில் மழையால் அதாவது கார் காலத்தால் புதிய பூக்கள் பூத்தும் மரங்கள், செடிகள் அடர்த்தியாக நெருக்கமாக பரவியும் உள்ளதால் குளிர்ச்சியானது, மலை உச்சியில் இருப்பதைப் போல் முல்லை நிலத்திலும் நிலவுகிறது. இதுவே முல்லை நிலத்தில் கூதிர் காலம் தோன்ற காரணமாக அமைந்துள்ளது. முல்லை நிலத்தில் பூக்க கூடிய பூக்களான கருவிளம் பூ, ஈங்கை மலர், அவரை மலர், முல்லைப் பூ ஆகிய பூக்கள் உடன் வாடைக் காற்றும் வீசும் என்பதை அறிந்துள்ளனர். அவை,

**கருவிளம் பூ, ஈங்கை மலர் மற்றும் வாடைக் காற்று**

**“...... ...... ...... புதல**
**பீலி ஒண்பொறிக் கருவிளை ஆட்டி**
**நுண்முள் ஈங்கைச் செவ்வரும்பு ஊழ்த்த**
**வண்ணத் துய்ம்மலர் உதிரத் தண்ணென்று**
**இன்னாது எறிதரும் வாடையொடு”** (குறு.110.3-7)

காட்டு நிலப்பகுதியில் உள்ள புதர்களில் மயிலின் தோகை கண் போல கருவிளம் பூக்கள் நிறைந்து காற்றில் ஆடுகிறது. கூரிய முட்களை உடைய ஈங்கையின் சிவந்த அரும்புகள் அனைத்தையும் உதிரச் செய்கின்ற குளிர்ந்த காற்றான வாடைக் காற்று வீசுகிறது. மேலும்,

**அவரைப் பூ, முல்லைப் பூ மற்றும் வாடைக் காற்று**

**“பனிப்புதல் இவர்ந்த பைங்கொடி அவரைக்**
**கிளிவாய் ஒப்பின் ஒளிவிடும் பல் மலர்**
**வெருக்குப்பல் உருவின் முல்லையொடு கஞலி**
**வாடை வந்தன ..... ...... ....... ”** (குறு.241.1-4)

பனிபடர்ந்த புதர்களின் மேல் அவரைப் பூவானது பூத்து கிளிவாய் போல பூ வடிவம் கொண்டுள்ளது. காட்டுப் பூனைப் பல் போல முல்லைப் பூக்கள் நெருக்கமாக பூத்துள்ளன. அந்த முல்லைப் பூ மணம் வாடைக் காற்றில் கலந்து வீசுகிறது. இதுவே கூதிர் காலம் என்று அழைக்கப்படும். மருத திணைப் பகுதியிலும் கூதிர் காலத்தைப் பற்றிய செய்திகள் கிடைக்கிறது.

இரண்டு பாடல்களும் ஒரே காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வெவ்வேறு பகுதியில் நிலப்பரப்பைக் காட்டுகிறது. வேட்டைச் சமூகத்தின் கடை நிலை, உணவு உற்பத்தி செய்யும் வேளாண் சமூகம் தோன்றுகிறது. பொதுவுடைமைச் சமுதாயத்தில் இருந்து நிலவுடைமைச் சமுதாயம் தோன்றும் காலக்கட்டத்தைக் குறிக்கிறது. பாடலில் இயக்கப் போக்கும் அதில் சொல்லப்படும் விலங்குகள் பறவைகள் ஆகியனவும் சமூக மாற்றத்திற்கு தொடர்பு உடையனவாக

உள்ளன. முல்லை நிலத்திற்கு உரிய காலம் கார் காலம் என்று சொல்லப்படும். பருவ மாற்றத்தால் கூதிர் காலத்தையும் காணமுடிகிறது. பாலை நிலம் மழையால் முல்லை நிலமாக மாற்றம் அடையும் அத்துடன் பாலை நிலத்துக்கு உரித்தான இளவேனிற் காலமும் இந்த முல்லை திணைப் பாடல்வழி அறிய முடிகிறது.

**இளவேனிற் காலம்**

முல்லை நில மக்கள் பொருள் வழி பிரிவின் போது கார் காலத்தில் வருவேன் என்று சொல்வார்கள். இல்லை என்றால், இளவேனிற் காலத்தில் வருவேன், தலைவன், தலைவியிடத்து கூறுவனவாகப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இளவேனிற் காலம் என்பது சித்திரை, வைகாசி மாதங்களைக் கொண்டவையாகயும் இலை துளிர்க்கும் காலமாகவும் அமைந்துள்ளது. இளவேனிற் காலத்தை வேப்பம்பூ பூக்கும் காலம் உணர்த்துகிறது. வேம்பின் பூ என்னும் பொருள் இளவேனிற்கால வரவுக்கான அடையாளமாகக் கொண்டுள்ளனர். அவை,

**“கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்**
**என் ஐ இன்றியும் கழிவது கொல்லோ?”** (குறு.24.1-2)

கருமையான அடிப்பகுதி உடைய வேப்ப மரத்தின் ஒளிமிக்க பூவாகிய புதுவருவாய் இளவேனிற் காலத்தில் பூத்துள்ளது. தலைவி, **“தலைவன் வருவதாக சொன்ன காலம் இதுவே இவர் இல்லாமல் கழிந்து போகுமா?” (தமிழண்ணல், 2022)** கூறுகிறாள். முல்லை நிலத்தில் வாழும் மக்களுக்கு இன்பம் தரும் காலமாகவும் கூடி வாழும் காலமாகவும் இருப்பது கார் காலமும் இளவேனிற் காலமுமே என்பதை பாடல்கள் மூலம் அறியபடுகிறது. முல்லை நில மக்கள் பெரும் பொழுதுகளை அறிந்ததைப் போல் சிறு பொழுதுகளையும் அறிந்துள்ளனர்.

**நேரம்**

நேரம் என்பது பூமியின் சுழற்சியாலும் சூரியனின் ஈர்ப்பு விசையாலும் இரவு, பகல் மாற்றத்தாலும் கணித்துப் பயன்படுத்துகின்றனர். இன்றைய காலத்தில் கடிகாரம் மூலம் நேரத்தைக் கணக்கிடுகின்றனர். பழந்தமிழர்கள் எப்பொருளை வைத்து நேரத்தை கணித்துள்ளனர் என்பதை தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளனர். அதுவே, நிலமும் பொழுதும் ஆகும். நிலம் என்ற பொருளின் மீதுதான் காலத்தையும் நேரத்தையும் கணித்துள்ளனர். அந்த முறையில் நேரத்திற்கு சிறு பொழுதுகள் என்று கூறுகின்றனர். ஒரு நாளுக்கு 6 சிறு பொழுதுகளாகப் பிரித்துள்ளனர். காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை இவற்றுள் முதல் மூன்று பகலையும் அடுத்த மூன்று இரவையும் குறிக்கும் நேரங்கள் ஆகும். அன்றைய ஒரு சிறு பொழுது இன்றைய கால நேரத்திற்கு 4 மணி நேரத்தைக் கொண்டுள்ளது. முல்லை நிலத்திற்கு உரிய நேரம் மாலைப்பொழுது ஆகும். முல்லை நில மக்களின் அதிகச் செயல்பாடுகள் நடைபெறும் பொழுதாக இருப்பதால் முல்லை திணைக்கு உரிய பொழுதாக மாலைப்பொழுது சொல்லப்படுகிறது.

**மாலைப்பொழுது**

குறிஞ்சித் திணைக்கும் மருதத் திணைக்கும் இடைப்பட்ட நிலமாக முல்லை நிலம் அமைந்து

இருப்பதைப் போல் பகலுக்கும் இரவுக்கும் இடைப்பட்ட நேரமாக மாலைப் பொழுது அமைக்கப் பட்டுள்ளது. முல்லை நில மக்கள் மாலைப் பொழுதை சூரியன், முல்லைப் பூ, பசுக்கள் மற்றும் உழவர்களின் செயல்பாடுகள் எனப் படிநிலை வளர்ச்சிக் குறியீடுகள் மூலம் அறிந்தனர். இந்த வரிசை முறையில் பார்க்கப்படுகிறது. அவை,

**“சுடர்செல் வானம் சேப்பப் படர்கூர்ந்து**
**எல்லுறு பொழுதின் முல்லை மலரும்**
**மாலை என்மனார் மயங்கி யோரே”** (குறு.234.1-3)

சூரியன் மறையும், வானம் சிவப்பாக தோன்றும், இரவு தொடங்கும் பொழுதில் முல்லைப் பூ மலரும் அந்நேரத்தை மாலைப் பொழுது என்று கணித்துள்ளனர். மேலும்,

**“எல்லை கழிய முல்லை மலரக்**
**கதிர்சினம் தணிந்த கையறு மாலையும்**
**இரவரம்பு ஆக நீந்தின மாயின”** (குறு.387.1-3)

சூரியனின் வெப்பத்தால் ஒளியால் காடுகளில் வெளிச்சம் பரவியுள்ளது. இந்த சூரிய ஒளியும் வெப்பமும் குறையும்போது காட்டின் வெளிச்சமும் அதன் எல்லையும் இருள் சூழ்ந்து குறைந்து கொண்டே வரும். அந்த வேளையில் முல்லைப் பூ மலரும், இரவு தோற்றம் பெறும் நேரத்தை மாலைப் பொழுது என்று முல்லை நில மக்கள் கூறியுள்ளனர்.

மாலைப் பொழுதைக் கூறுவதற்கு இயற்கையின் பொருளான சூரியனை வைத்தும் நிலத்தில் உருவான முல்லைப் பூவை வைத்தும் மாலைப் பொழுதை வரையறைச் செய்துள்ளனர். இந்த வரையறை ஆனது சமூக மாற்றத்தால் பசுக்களுடனும், முல்லைப் பூவுடனும், உழவர்கள் உடனும் தொடர்புடையனவாக அமைந்தள்ளது. மாலைப் பொழுதைக் குறிப்பதற்குப் பயன்பட்ட இயற்கை வர்ணனைகள் பின்னாளில் மனிதர்களின் செயல்களின் வழியாக மாற்றம் கண்டுள்ளது. அதனை,

**“பல்ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்**
**புன்தலை மன்றம் நோக்கி மாலை”** (குறு.64.1-2)

முல்லை நில மக்கள் காட்டு விலங்குகளைப் பிடித்து. அதன் குட்டிகளை வளர்க்க ஆரம்பித்தார்கள். இது வேட்டைச் சமூகத்தில் பெரிய விலங்குகள் கிடைக்காத போது சிறிய விலங்குகளைப் பிடித்து வருவார்கள். அதனை, கட்டுப்படுத்தி பழக்கப்படுத்தி அதன் மூலம் உணவு பசியைப் போக்கியுள்ளனர். பொதுவுடைமைச் சமுதாயத்தில் உள்ள பிற சமூக மக்களும் காட்டு விலங்குகளைப் பழக்கபடுத்துவதைத் தொடர்ந்தனர். பின், மேய்ச்சல் சமூகமாக மாறியது. பசுக்களை மேய்த்து அதிலிருந்து கிடைக்கும் பொருட்களை உணவு தேவைக்கும் மற்ற தேவைக்கும் முல்லை நில மக்கள் பயன்படுத்தினர். அவை, முல்லை நில மக்கள் குடும்பத்தில் ஒரு உறவாகவே மாறிவிடுகிறது. பசுக் கூட்டத்தைக் காட்டிற்கு மேய்ச்சலுக்கு நீண்ட தூரம் ஓட்டி கொண்டு

போவார்கள். பிறகு சூரியன் மறையும் நேரத்தில் ஊருக்குள் பசுக்களை ஓட்டி வருவார்கள் அந்த நேரத்தை மாலைப் பொழுது என்று பதிவு செய்துள்ளனர். முல்லைப் பூ மாலைப் பொழுதுக்கு குறியீடாவது போல் பசுக்களும் மாலைப் பொழுதை உணர்த்தும் குறியீடாயின. அவை,

**“கறரவ கன்றுவயின் படரப் புறவில்**

**பாசிலை முல்லை ஆசுஇல் வான்பூச்**

**செல்வான் செவ்வி கொண்டன்று”** (குறு.108.2-4)

கறவை பசுக்கள் தன் கன்று இருக்கும் மன்றத்தைத் தேடி விரைவாக போகும். காட்டில் முல்லைப் பூ பூத்துள்ளது. அத்துடன் சூரியன் மறைவால் வானம் சிவந்து காணப்படுகிறது. இதை மாலைப் பொழுது என்று வரையறை செய்கின்றனர். மேலும் விலங்குகள் பூக்கள் போன்ற பொருட்களை வைத்து சொல்வதைப் போல் அந்நில மக்களையும் வைத்து மாலை நேரத்தை குறிப்பிடுகின்றனர். அவை,

**“முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவர்**

**விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்**

**பொழுதோ தான்வந் தன்றே …….. ……..**

**……. ……… …….. ………**

**மாலை நனி விருந்து அயர் மார்”** (குறு.155.1-3,6)

பயிர் செய்த புன்செய் நிலமானது, மழை பெய்த பிறகு, மாடுகளை வைத்து உழுது, விதைகளை விதைத்து, உழவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரமாக, விதையை எடுத்து சென்றப் பனை ஓலைப் பெட்டியில் முல்லைப் பூவை எடுத்து வருவார்கள். அவர்கள் வரும் நேரம் மாலைப் பொழுது ஆகும். இருப்பிடத்தில் ஆயர்மகளிர் உணவு சமைத்து உண்ணும் விருந்து நேரமும் மாலை என்றே சொல்லப்படுகிறது.

மாலைப் பொழுதைக் குறிப்பனவாக அமைந்த முல்லைத் திணைப் பாடல்கள் இரண்டு சமூக காலக்கட்டத்தை காட்டுவனவாக உள்ளன. அவற்றை, முல்லை நில மக்களின் செயல்பாடுகள் மூலம் அறியமுடிகிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் படி ஒரு பொருள் அல்லது ஒரு செயல் காலத்தால் மாற்றம் அடைந்து கொண்டே வரும். இயக்கமும் நடைபெறும். எனினும் அவை ஒரு பொருள் தொடர்பைக் கூறுவனவாக இருக்கும். மாலைப் பொழுதை அறிவதற்கு முல்லை நில மக்கள் முதலில் சூரியனின் செயலைக் கொண்டு சொன்னார்கள். பிறகு முல்லைப் பூவைக் குறித்தார்கள். அதற்குப் பிறகு பசுக்களின் செயல் அதற்கு பிறகு மனிதனான உழவர்களைக் கொண்டு மாலைப் பொழுதை அறிந்தார்கள். சூரியன், முல்லைப் பூ, பசுக்கள், உழவர்கள் இப்பொருள்களின் மாற்றம் உடனே நடைபெற்ற மாற்றம் கிடையாது இம்மாற்றமடைய இரண்டு, மூன்று நூற்றாண்டுகள் கடந்து இருக்கும். இருந்தும் எல்லாம் மாலைப் பொழுதைக் குறிப்பிடும் செயல்களாகவே அமைத்துள்ளன. இந்த அமைப்பு தான் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் கட்டமைப்பு ஆகும்.

**முடிவுரை**

குறுந்தொகை முல்லைத்திணைப் பாடலில் முல்லைப் பூ, கொன்றைப் பூ, வேப்பம்பூ, பிச்சிப் பூ, கருவிளம் பூ, ஈங்கை மலர், அவரைப் பூ, பிடவம் பூ, பீர்க்கம் பூ ஆகிய 9 பூக்கள் இடம்பெற்றுள்ளன.

முல்லைத் திணை என்ற பெயர் மக்களின் உணர்வுக்கும் பூக்களுக்கும் உள்ள நீண்ட கால தொடர்பின் வழியாக, மக்களின் பழக்கத்தாலும் வழக்கத்தாலும் நிலைப்பெற்றுள்ளது.

முல்லை நில மக்கள் பூ என்ற பொருளைக் கொண்டு காலத்தையும் நேரத்தையும் கணித்துள்ளனர். தொல்காப்பியர் முதல்பொருளாக நிலத்தையும் பொழுதையும் வரையறை செய்துள்ளார்.

கார்கால வருகையை உணர்த்துவதற்குக் கொன்றைப் பூ, கார்காலம் வந்து விட்டதை உணர்த்துவதற்கு முல்லைப் பூ, கார்காலத்தை என்று உணர்த்துவதற்கு பிடவம் பூவும், பிச்சிப் பூவும் இவ்வாய்வின் மூலம் அறியலாம். இத்துடன் முல்லை நிலத்தில் நிலவிய பொதுவுடைமைச் சமுதாயம் நிலவுடைமைச் சமுதாயமாக மாறிய மாற்றங்களையும் அறியலாம்.

கூதிர் கால வரவை முல்லை நிலத்தில் பூக்கக் கூடிய பூக்களான கருவிளம் பூ, ஈங்கை மலர், அவரைப் பூ, முல்லைப் பூ ஆகிய பூக்களுடன் வாடைக்காற்று வீசி அறிவிக்கிறது. முல்லை நிலத்தில் உள்ள மக்களின் சமூகமான வேட்டைச் சமூகம், கால்நடைச் சமூகம், வேளாண் சமூகம் பற்றி வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மூலம் தெறிந்துகொள்ளமுடிகிறது. வேப்பம்பூ இளவேனிற் காலத்தை உணர்த்துகிறது.

நேரம் என்பது சிறு பொழுதைக் குறிக்கும். முல்லை நிலத்தில் உள்ள மக்களின் செயல்பாடுகள் மாலை நேரத்தில் அதிகமாக காணப்படுவதால் மாலை நேரத்தை முல்லையின் சிறுபொழுதாக பதிவு செய்துள்ளனர். இந்த மாலைப் பொழுதை அறிவதற்கு முல்லை நில மக்கள் சூரியனின் இயக்கம், முல்லைப் பூவின் இயக்கம், பசுக்களின் இயக்கம், உழவர்களின் இயக்கம் போன்ற பொருள்கள் மனிதச்செயல்கள் போன்றவற்றைக் காலகாலமாகப் பயன்படுத்தியுள்ளனர். சமூக மாற்றங்களும் சமுதாய மாற்றங்களும் பல நூற்றாண்டுகளைக் கடந்தும் பூக்கள் மக்களின் பண்பாட்டையும் வரலாற்றையும் தொடர்ந்து பதிவு செய்வதை அறிய முடிகிறது.

பொருள்முதல்வாதக் கூறுகளாக முல்லை நிலத்துப் பூக்கள் முதன்மைப் பெறுகிறது. அப்பூக்கள் பற்றிய செய்திகள் மூலம் அறியலாகும் காலமும், நேரமும் என்ற பொருளைக் காண இயக்கவியல் பொருள்முதல்வாதக் கூறுகளான இயக்கமும், மாற்றமும் காணமுடிந்தது. அப்பூக்களின் வர்ணனைகள் மூலம் மக்களின் பழக்க, வழக்கம் காணப்படுகிறது. பழக்க, வழக்கங்களின் தொடர் நிகழ்வால் வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கூறுகளான தொடர்புகளையும், உறவுகளையும் காணலாம்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

முல்லைநிலப் பூக்கள் பற்றியும், பூக்களின் வர்ணனைகளாலும் மக்களின் செயல்பாடுகள் பற்றி இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. பிச்சமுத்து ந., 2006, இலக்கிய இயக்கங்கள், சக்தி வெளியீடு, சென்னை.
2. தமிழண்ணல், 2022, குறுந்தொகை, கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
3. வானமாமலை நா., 2022, தமிழர் பண்பாடும் தத்துவமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
4. முப்பால்மணி கி., 2020, தமிழக மெய்யியலில் உலகாயதம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
5. முத்துமோகன் ந., 2012, இயங்கியல் பொருள்முதல்வாதம் ஓர் அறிமுகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
6. நியூ செஞ்சுரி ஆசிரியர் குழு, 2012, வரலாற்றுப் பொருள்முதல்வாதம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
7. கோவைவாணன், 2013, சங்க இலக்கிய மெய்யியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
8. சுப்பிரமணியன் கா., 2019, சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
9. ஞானசம்பந்தன் சண்முக., 2024 ஏப்ரல், திணைக் கொள்கை உருவாக்கமும் சடங்கியல் தொன்மவியல் மூலங்களும், உங்கள் நூலகம் மாத இதழ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
10. முத்துமோகன் ந., 2021, இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
11. முத்துமோகன் ந., 2007, மார்க்சியக் கட்டுரைகள், காவ்யா வெளியீடு, சென்னை.
12. பெருமாள் சாமி வெ., 2013, சங்க இலக்கியக் காட்சிகள் ( மார்க்சிய வெளிச்சத்தில்), பாரதி புத்தகாலயம் வெளியீடு, சென்னை.
13. மிலிட்டரி பொன்னுசாமி, 2014, இயக்கவியல் பொருள்முதல்வாதம் (மாரிஸ் கான்போர்த்), பாரதி புத்தகாலயம் வெளியீடு, சென்னை.
14. பேரின்பன் தேவ., 2014, தமிழர் வளர்த்த தத்துவங்கள், பாரதி புத்தகாலயம் வெளியீடு, சென்னை.


tamilmanam

15. பக்தவத்சல பாரதி, 2020 ஜனவரி, சங்க்கால உணவின் பொருளியல் பரிமாணங்கள், பிறழ் மாத இதழ், மதுரை.

16. கிருஷ்ணராஜா சோ., 2007, சங்ககாலச் சமூகமும் சமய-மெய்யியற் சிந்தனைகளும், குமரன் புத்தக இல்லம் வெளியீடு, சென்னை.

## References

[1]. Pichamuthu, N. (2006). Ilakkiya Iyakkangal [Literary Movements]. Sakthi Pathippagam, Chennai.

[2]. Thamizhannal. (2022). Kuruntokai. Koviloor Madalayam, Koviloor.

[3]. Vanamamalai, N. (2022). Tamilar Panpaadum Thathuvamum [Tamil Culture and Philosophy]. New Century Book House (P) Ltd., Chennai.

[4]. Muppaalmani, K. (2020). Tamilaga Meiyiyalil Ulogayatham [Lokayata in Tamil Philosophy]. New Century Book House (P) Ltd., Chennai.

[5]. Muthumohan, N. (2012). Iyangiyal Porulmudhalvaatham Oru Arimugam [Dialectical Materialism: An Introduction]. New Century Book House (P) Ltd., Chennai.

[6]. New Century Editorial Board. (2012). Varalaatru Porulmudhalvaatham [Historical Materialism]. New Century Book House (P) Ltd., Chennai.

[7]. Kovaivaanan. (2013). Sanga Ilakkiya Meiyiyal [Philosophy of Sangam Literature]. New Century Book House (P) Ltd., Chennai.

[8]. Subramanian, Ka. (2019). Sangakaala Samudhaayam [Sangam Age Society]. New Century Book House (P) Ltd., Chennai.

[9]. Gnanasambandan, Shanmugam. (2024, April). Thinai Kolgai Uruvaakkamum Sadangiyal Thonmaviyal Moolangalum [The Formation of Thinai Theory and Ritual Mythological Roots]. Ungal Noolagam (Monthly Magazine), New Century Book House (P) Ltd., Chennai.

[10]. Muthumohan, N. (2021). Indhiya Thathuvangalum Tamizhin Thadangalum [Indian Philosophies and Tamil Traces]. New Century Book House (P) Ltd., Chennai.

[11]. Muthumohan, N. (2007). Marxya Katturaigal [Marxist Essays]. Kavya Publication, Chennai.

[12]. Perumalsamy, Ve. (2013). Sanga Ilakkiya Kaatchigal (Marxya Velichathil) [Scenes of Sangam Literature (In the Light of Marxism)]. Bharathi Puthakalayam, Chennai.

[13]. Military Ponnusamy. (2014). Iyangiyal Porulmudhalvaatham (Maurice Cornforth) [Dialectical Materialism (Translation)]. Bharathi Puthakalayam, Chennai.

[14]. Perinban, Deva. (2014). Tamilar Valartha Thathuvangal [Philosophies Developed by Tamils]. Bharathi Puthakalayam, Chennai.

[15]. Bakthavatsala Bharathi. (2020, January). Sangakaala Unavin Poruliyal Parimaanangal [Economic Dimensions of Sangam Age Food]. Pirazh (Monthly Magazine), Madurai.